இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
செவ்வாய்க்கிழமை 28-10-2025

# நலம் காக்கும் முதலமைச்சர்!

ஒவ்வொரு தனிமனிதரையும் காக்கும் அரசாக தனது அரசு இருப்பதாக மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சொல்லி வருகிறார்கள். அதற்காகவே பல்வேறு திட்டங்களை நிறைவேற்றித் தந்து வருகிறார்கள்.

**அரசுக்கு வரும் கோரிக்கைகளுக்கு மட்டுமல்ல; நேரடியாக மக்களிடம் சென்று கோரிக்கை மனுக்களையும் பெற்று அதனையும் நிறைவேற்றித் தந்து வருகிறார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.**

**இந்த வரிசையில் மிக முக்கியமான திட்ட முன்னெடுப்பாக இருப்பது 'நலம் காக்கும் ஸ்டாலின்' முகாம்கள் ஆகும். இந்த முகாம்களை ஆகஸ்ட் 2 ஆம் நாளன்று சென்னையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்கள்.**

'நலம் காக்கும் ஸ்டாலின்' முகாம்கள் வாரம்தோறும் சனிக்கிழமைகளில் நடத்தப்படுகின்றன. தமிழ்நாட்டின் 38 மாவட்டங்களிலும் இந்த முகாம்கள் நடந்து வருகின்றன. தமிழ்நாடு முழுவதும் 1,256 முகாம்கள் நடத்த முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இதுவரை 446 முகாம்கள் நடந்துள்ளன. இதுவரை 6 லட்சத்து 97 ஆயிரத்து 941 பேர் பயனடைந்துள்ளதாக மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

சிறப்பு மருத்துவ வசதிகள் குறைந்த ஊரக பகுதிகள், குடிசைப் பகுதிகள், பழங்குடியினர் அதிகம் வசிக்கும் பகுதிகளில் இந்த முகாம்களை நடத்த அரசு திட்டமிட்டது.

40 வயதுக்கு மேற்பட்டோர், நீரிழிவு மற்றும் உயர்இரத்த அழுத்த நோயால் பாதிக்கப்பட்டவர்கள், மன நலபாதிப்புடையோர், இதய நோயாளிகள், கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள், வளர்ச்சிக் குன்றிய குழந்தைகள், மாற்றுத்திறனாளிகள், பழங்குடியினர் மற்றும் சமூக - பொருளாதார ரீதியில் பின்தங்கிய மக்களுக்கு முன்னுரிமை வழங்க உத்தரவிட்டார் முதலமைச்சர் அவர்கள். அந்த வகையில் தான் 7 லட்சம் பேரின் நலன் காக்கப்பட்டுள்ளது.

**"ஜனநாயகத்தில் மக்கள் நல்வாழ்வு என்பதும் மிகமிக முக்கியமானது ஆகும். நகர்ப்புறத்தில் - படித்த - வசதியானவர்களுக்கு கிடைக்கும் மருத்துவ சேவையானது, கிராமப்புறத்தில் - ஏழை எளிய பாமர மக்களுக்கும் கிடைக்க வேண்டும் என நினைக்கிறேன். அதனைச் செய்து தர வேண்டும் என்று உறுதி ஏற்கிறேன்"** என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதனைச் செய்து காட்டியும் வருகிறார்கள்.

இந்த முகாமுக்கு வரும் அனைவருக்கும் முழு உடல் பரிசோதனை கட்டணம் இல்லாமல் செய்யப்படுகிறது. தனியார் மருத்துவமனைகளில் ரூ.20 ஆயிரம் செலவிலும், அரசு மருத்துவமனைகளில் ரூ.4 ஆயிரம் செலவிலும்தான் முழு உடல் பரிசோதனை செய்ய முடியும். ஆனால் 'நலம் காக்கும் ஸ்டாலின்' முகாம்களில் முழு உடல் பரிசோதனைக்குக் கட்டணம் இல்லை.

முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டமும் தமிழ்நாட்டில் நடைமுறையில் இருக்கிறது. இந்த திட்டத்தில் 1.46 கோடி குடும்பங்கள் பயன்பெற்று வருகின்றன. இந்த காப்பீட்டுத் திட்டத்தில் பதிவு செய்ததும் உடனடியாக அட்டை வழங்க முதலமைச்சர் உத்தர விட்டுள்ளார். முகாம்களில் பங்கெடுத்த 21 ஆயிரத்து 191 பேருக்கு உடனடியாக மருத்துவக் காப்பீட்டு அட்டை வழங்கப்பட்டுள்ளது.

**மக்கள் நல்வாழ்வைக் காக்கும் ஏராளமான திட்டங்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்துள்ளார்கள். மக்களைத் தேடி மருத்துவம், இன்னுயிர் காப்போம் - நம்மைக் காக்கும் 48, பாதம் பாதுகாப்போம், மக்களைத் தேடி ஆய்வக சேவைகள், இதயம் காப்போம் திட்டம், சிறுநீரகம் காக்கும் சீர்மிகு மருத்துவ திட்டம், நடப்போம் நலம் பெறுவோம் திட்டம், வணிகர்களை தேடி மருத்துவ திட்டம், தொழிலாளர்களை தேடி மருத்துவம், முதல்வர் மருந்தகம் போன்ற பல்வேறு திட்டங்களை அறிமுகம் செய்து மக்களைக் காத்து வருகிறார் முதலமைச்சர்.**

கடந்த ஆகஸ்ட் 15 சுதந்திர தினத்தன்று கோட்டையில் கொடியேற்றி வைத்து விட்டு உரையாற்றிய முதலமைச்சர் அவர்கள், **"ஜெனரிக் மருந்துகளையும் பிற மருந்துகளையும் குறைந்த விலையில் பொதுமக்களுக்கு கிடைக்கச் செய்யும் வகையில் முதல் கட்டமாக 1000 மருந்தகங்கள் திறக்கப்படும்"** என்று அறிவித்தார். மருந்தகங்கள் திறக்கப்பட்டுள்ளன.

முதல்வர் மருந்தகங்களில் பொது மக்களுக்கு 25 சதவீதம் வரை தள்ளுபடி வழங்கப்படுகிறது. இதன்மூலம் தனியார் மருத்துவமனை களுக்குச் செல்லும் பொதுமக்களும் அதிக விலை கொடுத்து வாங்க வேண்டிய நீரிழிவு, ரத்த அழுத்தம் போன்ற பாதிப்புகளுக்கான மருந்துகளை குறைந்த விலையில் முதல்வர் மருந்தகங்களிலிருந்து வாங்கி பயன் பெற முடியும்.

வறுமையின்மை - பட்டினி ஒழிப்பு - தரமான கல்வி பாலின சமத்துவம் - தூய்மையான குடிநீர் - குறைந்த விலை - வேலைவாய்ப்பு - பொருளாதார குறியீடு - தொழில் - உள்கட்டமைப்பு - சம வாய்ப்புகள் - அமைதி - மருத்துவம் - மக்கள் நல்வாழ்வு - நுகர்வு - உற்பத்தி ஆகிய அனைத்து குறியீட்டிலும் தமிழ்நாடு மிகச் சிறந்து விளங்குவதாக ஒன்றிய அரசின் 'நிதி ஆயோக்' அறிக்கை சொல்கிறது. அதற்கு இது போன்ற மக்கள் நல்வாழ்வுத் திட்டங்கள்தான் அடிப்படைக் காரணம் ஆகும்.

**உயர்தரமான மருத்துவ சேவைகளை வழங்குவதில் தமிழ்நாடு, இந்தியாவிலேயே முன்மாதிரி மாநிலமாக விளங்கி வருகிறது. மக்களைத் தேடி மருத்துவம் திட்டமானது ஐக்கிய நாடுகள் சபை அமைப்பின் விருதையும் பாராட்டையும் பெற்றுள்ளது. மற்ற திட்டங்கள் அனைத்தும் மக்களின் விருதைப் பெற்றுள்ளன.**

●●

### முதலமைச்சர் - கழகத் தலைவர் தலைமையில் – இன்று

# தமிழ்நாடு தலைகுனியாது "என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி" பயிற்சிக் கூட்டம்!

## கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன் அறிவிப்பு!



கழகத் தலைவர் அவர்களின் திட்டமிடலின்படி, வருகின்ற சட்டமன்றத் தேர்தலை எதிர்கொள்ளும் வகையில் பல்வேறு முன்னெடுப்புகளை கழகம் மேற்கொண்டு வருகிறது.

அந்த வகையில் தமிழ்நாட்டை வளைத்திட முயற்சிக்கும் வஞ்சக சூழ்ச்சி கொண்ட ஒன்றிய பா.ஜ.க. அரசின் முன்பு "தமிழ்நாடு தலைகுனியாது" என்ற பரப்புரையை கழகம் தொடங்கவுள்ளது. அதன் ஒருபகுதியாக ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் கழகத்தின் வெற்றியை உறுதி செய்யும் வகையில்,

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் - கழகத் தலைவர் அவர்கள் தலைமையில் "என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி" என்ற முன்னெடுப்புக்காக **"கழக மாவட்டச் செயலாளர்கள், மாநிலங்களவை மற்றும் மக்களவை உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், தொகுதிப் பார்வையாளர்கள் மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழகச் செயலாளர்களுக்கான பயிற்சிக் கூட்டம்"** இன்று (28.10.2025 - செவ்வாய்க்கிழமை), காலை 9.00 மணி அளவில் மாமல்லபுரம், ஈ.சி.ஆர்.சாலையில் உள்ள "கான்ஃப்ளுயன்ஸ் ஹாலில்" (Confluence Hall) நடைபெறும்.

இக்கூட்டத்தில் **மாவட்டச் செயலாளர்கள், அமைச்சர்கள், கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், தொகுதிப் பார்வையாளர்கள், மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், மாநகரச் செயலாளர்கள், ஒன்றியச் செயலாளர்கள், நகரச் செயலாளர்கள், பகுதிச் செயலாளர்கள், பேரூர்ச் செயலாளர்கள்** அனைவரும் தவறாது கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18.

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவுப்படி

# சென்னை மாநகரில் வெள்ள நிவாரணப் பணிகள் தீவிரம்!

## தயார் நிலையில் 106 சமையல் கூடங்கள்!

சென்னை, அக். 28 - பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் 215 இடங்களில் நிவாரண மையங்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டு தொடர்ந்து செயல்படுகின்றன. இந்த மையங்களில் உணவு, சுகாதார வசதி, குடிநீர் வசதிகள் செய்யப் பட்டுள்ளன.

நிவாரண மையங்களுக்கு உணவு வழங்க ஏதுவாக 106 மைய சமையல் கூடங்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

தாழ்வான பகுதிகளில் உள்ள பொதுமக்களுக்கு 22.10.2025 முதல் 27.10.2025 வரை மொத்தம் 4 இலட்சத்து 9 ஆயிரத்து 650 பேருக்கு உணவு வழங்கப்பட்டுள்ளது. மழைநீர் தேங்கும் இடங்களில் மழைநீரை வெளியேற்றும் வகையில் பல்வேறு திறன் கொண்ட 2000 க்கு மேற்பட்ட மோட்டார் பம்புகள் ஆங்காங்கே தயார் நிலையில் உள்ளன.

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் விழும் மரங்களை அகற்றுவதற்காக 457 மர அறுவை இயந்திரங்களும் தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

சென்னையில் உள்ள 22 சுரங்கப்பாதைகளில் மழைநீர் தேங்காமல் தொடர்ந்து பராமரிக்கப்பட்டு வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் வாழும் பொதுமக்களுக்கு மழை வெள்ளம் காரணமாக ஏதேனும் பாதிப்புகள் ஏற்பட்டால், 150 இணைப்புகளுடன் கூடிய 1913 எனும் கட்டணமில்லா தொலைபேசி எண்ணிற்கு புகார்கள் தெரிவிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த புகார்கள் மூலமும் சமூக ஊடகங்களில் வரும் புகார் மீதும் உடனடி நடவடிக்கைகள் எடுக்கப் பட்டுவருகின்றன. மேலும், கண்காணிப்பு நடவடிக்கைகளும் மேற் கொள்ளப்படுகின்றன.

வடகிழக்குப் பருவமழையால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை அகற்றிட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள பெருநகர சென்னை மாநகராட்சியின் அலுவலர்கள், பொறியாளர்கள், பணியாளர்கள், தூய்மைப் பணியாளர்கள் உள்ளிட்ட 22 ஆயிரம் பேரும் சென்னை குடிநீர் வாரியம் 2,149 களப்பணியாளர்களும் தயார் நிலையில் உள்ளனர்.

சென்னை மாநகரில் பொதுமக்களுக்கு 454 குடிநீர் வாகனங்கள் மூலம் 15.10.2025 முதல் குடிநீர் வழங்கப்படுகிறது. 26.10.2025 அன்று மட்டும் 2828 நடைகள் வாயிலாக தடையில்லாமல் குடிநீர் வழங்கப்பட்டுள்ளது.

### செங்கல்பட்டு மாவட்டம்:

# முட்டுக்காடு பகுதியில் 'கலைஞர் சர்வதேச பன்னோக்கு அரங்கம்' பணி!

## அமைச்சர் எ.வ.வேலு ஆய்வு!

சென்னை, அக். 28 - பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு நேற்று செங்கல்பட்டு மாவட்டம் முட்டுக்காடு பகுதியில் உருவாகி வரும் "கலைஞர் சர்வதேச பன்னோக்கு அரங்கம்" பணிநிலையை நேரில் பார்வையிட்டார். இத்திட்டம் 2.6.2023 அன்று தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களால் அறிவிக்கப்பட்டு, 29.5.2025 அன்று அடிக்கல் நாட்டப் பட்டது.

*திட்டத்தின் விவரங்கள் வருமாறு:-*

*அரசாணை எண்: 23நாள்: 04.09.2024, மொத்த திட்ட மதிப்பு: ரூ. 525 கோடி*

*நிலம் ஒதுக்கீடு: 37.99 ஏக்கர் கட்டட உயரம்: அடித்தளம் + முதல் தளம்*

*மொத்த கட்டட பரப்பளவு: 2.08 இலட்ச சதுர அடி*

*இதில்: கண்காட்சி அரங்கம் - 91,924 சதுர அடி, பன்னோக்கு அரங்கம் - 50,633 சதுர அடிஇ கலையரங்கம் - 64,960 சதுர அடி,*

*பணி துவக்கம்: 29.05.2025, பணிக்காலம்: 18 மாதங்கள், பணி நிறைவு இலக்கு: பிப்ரவரி 2026*

*தற்போதைய நிலை: இரண்டாம் தள பணி நடை பெற்று வருகிறது*

*முக்கிய வசதிகள் கண்காட்சி அரங்கம் (10,000 நபர்கள் அமரும் வசதி), பன்னோக்கு அரங்கம் (5,000 நபர்கள் அமரும் வசதி), கலையரங்கம் (1,500 நபர்கள் அமரும் வசதி), VIP அறைகள்,*

*● உணவுக் கூடம், பத்திரிக்கையாளர் அறை, அலுவலக அறைகள், 1,638 நான்கு சக்கர வாகனங்கள் மற்றும் 1,700 இரண்டு சக்கர வாகனங்களுக்கு நிறுத்துமிடம்*

**பெற்ற அனுமதிகள்**

*● சுற்றுச்சூழல் அனுமதி, DTCP அனுமதி, கடலோர ஒழுங்குமுறை ஆணைய அனுமதி,*

*● தீயணைப்புத் துறை அனுமதி*

*அமைச்சர் எ. வ. வேலு பார்வையிட்ட இந்த ஆய்வுக் கூட்டத்தில் பொதுப் பணி துறை செயலாளர் மங்கத் ராம் சர்மா பொதுப் பணி துறை தலைமை பொறியாளர் மணிவண்ணன், பொதுப்பணி துறை தலைமைப் பொறியாளர் மணிகண்டன் மற்றும் துறை சார்ந்த அதிகாரிகள் பங் கேற்றனர்.துறை கலந்து கொண்டனர்.*

*இத்திட்டம் நிறைவடைந்தவுடன், உலகத் தரத்திலான கண்காட்சி மற்றும் பன்னோக்கு அரங்கங்கள் தமிழகத்தின் சர்வதேச அடையாளமாக மாறும் என அமைச்சர் தெரிவித்தார்.*



பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் நேற்று (27.10.2025) செங்கல்பட்டு மாவட்டம், முட்டுக்காடு பகுதியில் அமைக்கப்பட்டுவரும் "கலைஞர் சர்வதேச பன்னோக்கு அரங்கத்தின்" பணிகளை பார்வையிட்டு, ஆய்வு செய்தார்.